International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

**தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)**

Volume: 04 Issue: 03 July to September 2022 www.irjtsjournal.org

# சிற்பக்கலை மரபில் புராணச் செல்வாக்கு: ஈழத்துச் சிதம்பரத்தை அடிப்படையாகக் கொண்டது

திருச்செல்வம் கிஷாந்தினி,
*விரிவுரையாளர்,*
*இந்துநாகரிகத்துறை, இந்துக்கற்கைகள் பீடம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.*

***ஆய்வுச் சுருக்கம்***

*இந்தியக் கலைமரபுகள் பண்பாட்டுப் பிரதிபலிப்புக்களாகவே அமைந்துள்ளன. இந்துக்கலைகள் அறுபத்து நான்காக வகுக்கப்பட்டாலும் அவற்றுள் நுண்கலைகள் என்று சொல்லப்படும் கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் ஆகியன முதன்மைபெற்றுத் திகழ்கின்றன. இவ்அழகுக் கலைகளுள் ஒன்றாகச் "சிற்பம்" போற்றப்பட்டுச் சிற்பக்கலை, மக்களிடையே பெருவழக்கில் வந்துள்ளது. ஆலயம் என்னும் உடலுக்கு உயிராக விளங்குவது சிற்பமாகும். இவை தொன்மையையும், தத்துவச் செல்நெறியையும் பிரதிபலிப்பனவாகவே அமைந்துள்ளன. அந்தவகையில் ஆலயச் சிற்பங்கள் புராணங்களைத் தழுவிய போக்கிலே அமைக்கப்பட்டுள்ளமையும் கண்கூடு. கோவிற் பண்பாட்டைப் பண்டைக் காலத்திலிருந்து வளர்த்துவரும் தமிழ் நாட்டில், சமய தத்துவங்களை விளக்கும் வகையில் கடவுள் புராணங்களும், தல புராணங்களும், அடியவர் புராணங்களும் பலவாகத் தோன்றியுள்ளன. ஆலயத்தின் வளாகத்தில் புராண நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் சிற்பங்கள் விளங்கும் அதேவேளை கருவறை விக்கிரகம் தலப்பெருமையை ஒட்டியே அமைக்கப்பட்டு, மக்கள் வழிபாட்டைப் பெற்று வருகின்றனர். எனவே, சிற்பக்கலைப் படைப்பிற்கு ஆன்மநல உந்துசக்தியாக புராணப் பின்னணி அமைந்துள்ளது என்பது மனங்கொள்ளத்தக்கது. இந்தியாவில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் அழகியல் சார்புடன் அமைந்து ஆன்மிக நோக்கில் வளர்ந்து வந்த சிற்பக்கலையின் செல்வாக்கு, ஈழத்துத் திருக்கோயில்களிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளமைக்கு புராணச் செய்திகளே அடிப்படையாகும். யாழ்ப்பாணத்து ஆலயங்களில் சிற்பக்கலைப் பாரம்பரியமே காணப்படுகின்றமையானது சிறப்பாகும். அந்தவகையில் காரைநகர் சிவன் கோயில், கலைகளின் பிறப்பிடமாகத் திகழும் வகையில் சிற்பக்கலை அனைத்துக் கூறுகளிலும் தனித்துவமிக்கதாக விளங்குகின்றது. அந்தவகையில், அச்சிற்பங்கள் பல பண்பாட்டம்சங்களைப் பிரதிபலிப்பனவாக விளங்கினும் அவற்றுள் புராணச் சித்திரிப்புக்களை எடுத்துவிளக்குவதாக இவ்வாய்வு அமைகிறது. ஆலயத்திலுள்ள சிற்பங்கள் சித்திரிக்கும் புராணச் செய்திகளை அடையாளப்படுத்துதல் என்பது இவ்வாய்வின் நோக்கமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.இவ்வாய்வானது விபரண ஆய்வு முறைமையியலுக்கு அமையக் கட்டமைக்கப்படுகிறது. ஆய்வின் தேவை கருதி ஆய்வுசார் விடயங்கள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ்வாய்வில் கள ஆய்வு பிரதான இடத்தைப் பெற்றுள்ளது. கள ஆய்வு வடிவங்களான கலந்துரையாடல், நேர்காணல் மற்றும் நேரடி அவதானிப்பு ஆகியவற்றினூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. சிவமூர்த்தங்கள், தல வரலாற்றுடன் தொடர்புடைய சிற்பங்கள் மற்றும் தலபுராணம் சித்திரிக்கும் ஊர்ப்பண்பாட்டை வெளிப்படுத்தும் சிற்பங்கள் என்ற அடிப்படையில் இவ்வாய்வு வளர்ச்சி பெற்றுள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *ஈழத்துச் சிதம்பரம்,புராணம், சிற்பம், வரலாறு, வடிவங்கள்*

***அறிமுகம்***

உலக அரங்கில் திருக்கோயில்களில் இன்றளவும் பழைய பண்பாட்டுடன் கூடிய உயரிய நாகரிகம் வளர்ந்த வண்ணமிருப்பதற்குச் சிறந்த காரணம், அதன் கவின்கலை வளமே. அதிலும் சிறப்பாகச் சிற்பக்கலை மாட்சியே என்பது தெளிவாக விளங்குகின்றது.

இந்துசமயம் திருக்கோயில் விக்கிரக ஆராதனையை – சிலை வழிபாட்டை வித்தாகக் கொண்ட, பல்வகைச் சிற்பக்கலைக் கருவூலத்தை ஆலமரமாக வளர்த்துள்ளது. இந்த உயரிய சமயப் பண்பாட்டிற்கு புராணங்கள் துணை நிற்கின்றன. எடுத்துக்காட்டாக, சைவசமயத்திலே மூர்த்தி வகைகளும், வைணவ சமயத்திலே அவதார வகைகளும் உள்ளன என்பதை நினைவிற் கொள்ளலாம்.

‘‘சில்’’ எனும் வேர்ச்சொல்லின் அடியாகச் ‘‘சிலை’’ என்பது பிறந்தது. ‘‘கல்’’ எனும் பொருளைக் கொண்ட ‘‘சிலை’’ என்பதன் தொடர்பாகச் ‘‘சிற்பம்’’ எனும் சொல் உருவாகியது. இதன் பரிணாம வளர்ச்சியில், அழகுக் கலைகளுள் ஒன்றாகச் ‘‘சிற்பம்’’ போற்றப்பட்டுச் சிற்பக்கலை, மக்களிடையே பெருவழக்கில் வந்துள்ளன. அழகுக் கலைக் கூறுகளுடன் மிகத் தொடர்பு கொண்டதாகச் சிற்பக்கலை போற்றப்படுகிறது. ஆலயம் என்னும் உடலுக்கு உயிராக விளங்குவது சிற்பமாகும்.

இந்துசமயத்தின் தொன்மையை எடுத்து விளக்குவதாக புராணங்கள் கொள்ளப்படுகின்றன. பல சமயங்களின் உயிர்நாடி புராண நம்பிக்கையின் பொருத்தே உள்ளது. புரா + தனம் எனப் பகுக்கப்பட்டு மிகப் பழமையானது எனப் பொருள்படும். கோவிற் பண்பாட்டைப் பண்டைக் காலத்திலிருந்து வளர்த்துவரும் தமிழ் நாட்டில், சமய தத்துவங்களை விளக்கும் வகையில் கடவுள் புராணங்களும், தல புராணங்களும் பலவாகத் தோன்றியுள்ளன. இவை மகா புராணங்கள், உப புராணங்கள், தல புராணங்கள் எனும் வகைப்பாடுகளில் அடக்கப்படுகின்றன.

ஆலயத்தின் வளாகத்தில் புராண நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் சிற்பங்கள் விளங்கும் அதேவேளை கருவறை விக்கிரகம் தலப்பெருமையை ஒட்டியே அமைக்கப்பட்டு மக்கள் வழிபாட்டைப் பெற்று வருகின்றனர். எனவே, சிற்பக்கலைப் படைப்பிற்கு ஆன்மநல உந்துசக்தியாக புராணப் பின்னணி அமைந்துள்ளது என்பது மனங்கொள்ளத்தக்கது.

இந்தியாவில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் அருளியல் சார்புடன் அமைந்த ஆன்மிக நோக்கில் வளர்ந்து வந்த சிற்பக்கலையின் செல்வாக்கு,ஈழத்துத் திருக்கோயில்களிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளமைக்கு புராணச் செய்திகளே அடிப்படையாகும். யாழ்ப்பாணத்து ஆலயங்களில் சிற்பக்கலைப் பாரம்பரியமே காணப்படுகின்றமையானது சிறப்பாகும். அந்தவகையில் காரைநகர் சிவன் கோயில், கலைகளின் பிறப்பிடமாகத் திகழும் வகையில்சிற்பக்கலை அனைத்துக் கூறுகளிலும் தனித்துவமிக்கதாக விளங்குகின்றது. அந்தவகையில், அச்சிற்பங்கள் பல பண்பாட்டம்சங்களையும் பிரதிபலிப்பனவாக விளங்கினும் அவற்றுள் புராணச் சித்திரிப்புக்களை எடுத்துவிளக்குவதாக இவ்வாய்வு அமைகிறது.

***ஈழத்துச் சிதம்பரம் - அறிமுகம்.***

ஈழத் திருநாட்டிலுள்ள சிவன் தலங்கள் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், நகுலேச்சரம், முனீஸ்வரம் என்பனவாகும். இவற்றுடன் காரைநகரிலுள்ள ஈழத்துச் சிதம்பரம் என்று அழைக்கப்படும் சிவன் கோயிலும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். தமிழ் நாட்டில் களப்பிரரின் இருண்ட ஆட்சியில் பிறசமயங்கள் வேரூன்றத் தொடங்கின. எனினும் பின்வந்த பல்லவர் ஆட்சியில் நாயன்மார்களினால் ஏற்படுத்தப்பட்ட சமயப் புரட்சியினால் சைவசமயம் மீண்டும் புத்தொளி பெற்றது. அது சோழர் காலத்தில் மேலும் சிறந்தோங்கியது. அக்காலகட்டத்தில் தமிழகத்தில் அமைந்த கோயில்கள் எல்லாவற்றிலும் சிதம்பரமே பிரதான ஆலயமாக விளங்கியது. சைவசமய மரபில் கோயில் என்பது முதற்கண் சிதம்பரத்தையே குறிக்கும். உலகம் உய்யும் பொருட்டு பஞ்சகிருத்திய நடனத்தை ஆடும் நடராசப் பெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களையும் இந்நடனத்துள் அடக்கியுள்ளார். உலகம் உய்யும் பொருட்டு உலகத்தின் மையத்தில் நின்று எம்பெருமான் நடனம் ஆடினார் என்பர். அம்மையமே ஈழத்துச் சிதம்பரமாகும். (பாலேந்திரன், ச., 2002:153)

இவ்வாலயம் இலங்கையின் சிரசாக விளங்கும் யாழ் குடாநாட்டின் மேற்கே காரைநகரில் அமைந்து விளங்குகிறது. யாழ்நகரிலிருந்து ஏறக்குறைய பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ள இச்சிதம்பரத்தில், தில்லை நடராசர் கோயிலில் மார்கழி மாதந்தோறும் நடைபெறும் திருவாதிரைப் திருவிழாவைப் போன்று நடைபெற்று வந்தமையால்தான் இக்கோயிலுக்கு ஈழத்துச் சிதம்பரம் என்று பெயர் ஏற்பட்டது. பத்து நாட்கள் திருவெம்பாவைப் பாராயணம் பூசை, ஒன்பதாம் நாள் விசேட அபிஷேகம், ஆருத்ரா தரிசனம், பின் பஞ்சரத பவனி என்பன நடைபெற்று வருவதோடு, கம்பீரமான இரண்டு இராஜகோபுரங்களுடன் திகழ்வதால் இத்தலம் புகழ் பெற்றுத் திகழ்கிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவும் விசேடமாக அமைந்த பெருங்கோயிலாகும்.

- சுவாமி பெயர் : சுந்தரேசுவரர்
- இறைவி பெயர் : சௌந்தராம்பிகை
- தலவிருட்சங்கள் : அரசு, வன்னி, இலுப்பை
- தீர்த்தங்கள் : பரமானந்தகூபம், சித்தாமிர்தவாவி, தூர்வாச சாகரம். (பாலேந்திரன், ச., 2002:159)

புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்கள் ஈழத்துச் சிதம்பர புராணம் பாடி, திண்ணபுர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசரை ஏத்தியுள்ளார். யாழ்ப்பாணத்து முற்காலத் தற்கால வரலாறுகளையும், மரபுகளையும் தழுவி இதனைத் தந்துள்ளனர். இப்புராணம் பத்துச் சருக்கங்களை உடையதாக உள்ளது. பாயிரச் சருக்கம் முதலாக விழாவயர் சருக்கம் ஈறாக அமைந்துள்ள சருக்கங்களில் மொத்தமாக 806 செய்யுள்களை உள்ளடங்கியது. இப்புராணத்திற்கு பண்டிதமணியின் துணைவியார் பண்டிதைமணி பரமேசுவரி உரை எழுதியுள்ளார். சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களினால் 1972இல் பதிக்கப்பெற்று,ஈழத்துச்சிதம்பர தேவஸ்தானத்தினால் வெளியிட்டும் வைக்கப்பட்டுள்ளது. (இளமுருகனார், சோ., 2017:IV)

***சிற்பங்களும் புராண வெளிப்பாடுகளும்***

கோயில்கள் கலைக்கூடமாகவே அமைகின்ற நிலையில், சிறப்பாக சிற்பக்கலையானது ஆலயங்களிலேயே தத்துவார்த்தமான நிலையில், பண்பாடு, கலாசார விழுமியங்களை பேணுகின்ற வகையில் அமைக்கப்படுவதனைக் காணலாம். அந்தவகையில், கோயில் சிற்பங்கள் வெறுமனே அழகார்ந்த தன்மையில் அமையாது ஏதோவொரு கருத்தினை, தத்துவத்தினை அல்லது செய்தியினை வெளிப்படுத்தும் பாங்கிலானது. அவை பெரும்பாலும் புராணப் பின்னணியைச் சிறப்பாக உள்வாங்கி, அவற்றை வெளிப்படுத்தும் வகையிலேயே ஆலயங்களில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கோயில்கள் புராணச் செய்திகளை வெளிப்படுத்தும் நோக்கமானது, இந்துப்

பண்பாட்டுக் கலாசாரங்களைப் பேணிப்பாதுகாப்பதேயாகும். புராணச் செய்திகளைக் காட்சிப்படுத்தும் போது, அவற்றின் தத்துவார்த்தம் அடியவர்களின் மனதில் உட்பதியப்படுவதோடு, விழுமியம் சார்ந்த மனக்கற்கைக்கும் ஆலயங்கள் அடிப்படையாக மிளிர்கின்றன.

மஹா புராணங்கள், உப புராணங்கள் புலப்படுத்தும் இறைவனின் காட்சிகளையும், தலபுராணங்கள் புலப்படுத்தும் வரலாறுகளையும் ஆலயத்தின் தன்மைக்கேற்ப விமானம்,கோபுரம்,சுவர்,தேர், மண்டப முகப்புக்கள், ஆலய வெளி வளைவுகள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்களாக வடித்து வைக்கப்பட்டிருத்தலானது ஆலயத்தின் மகிமையையும் அதன் சிறப்பையும் அத்தலம் அமைந்திருக்கும் இடத்தின் பெருமையையும் உலகிற்கு எடுத்தியம்புவதற்கு வழிவகுக்கின்றது எனலாம். அந்த வகையில், காரைநகர் சிவன் கோயிலில் காணலாகும் சிற்பங்கள் புலப்படுத்தும் புராண மரபுகளை அடியொற்றியே செதுக்கப்பட்டுள்ளமை என்பதை ஆராய்தல் இவ்வாய்வின் பூரணத்துவத்திற்கு வழிவகுக்கும்.

***ஆலயங்களில் புராணங்களின் பயில்நிலை***

இந்துக்கோயில் அமைப்பு, இந்துக்கோயில் வழிபாட்டுக்கென நிறுவப்படும் விக்கிரகங்கள், இந்துக்கோயிற் கலை வர்ணத்தை வளம்படுத்தும் சிற்பங்கள், கருவறை மீதெழுகின்ற விமானங்கள், ஆலயத்தின் தலை வாசலை அலங்கரிக்கின்ற கோபுரங்கள், விக்கிரக வழிபாட்டில் இடம்பெறுகின்ற நுண்கலை அம்சங்களாகிய இசை, நடனம், ஓவியம், அலங்காரம் போன்ற அம்சங்கள், இந்துக்கோயிற் கிரியைகள், விரத அனுட்டானங்கள், பண்பாட்டோடு கூடிய வாழ்வை நெறிப்படுத்தக்கூடிய ஒழுக்க நெறிமுறைகள், தலம் பற்றிய பௌராணிகக் கதைகள், தலப்பெருமை, தீர்த்த மகிமை, தலங்களுக்கு மேற்கொள்ள வேண்டிய யாத்திரைகளின் முக்கியத்துவம், பக்திநெறி போன்ற இன்னோரன்ன அம்சங்களை உள்ளடக்கியதாக புராணங்கள் அமைகின்றன.

***ஆலயச் சிற்பங்களில் புராணங்களின் பயில்நிலை***

பண்பாட்டின் உறைவிடமாக விளங்குகின்ற இந்துக் கோயில்களில் பல்வேறு நிலைகளில் இடம்பெறும் இறைமூர்த்தங்கள் காலங்காலமாக இந்துப் பாரம்பரியத்தின் பண்பாட்டுத்துறைகளை வளம்படுத்துவதில் பெருந்துணை புரிந்து வந்துள்ளன. புராணம், ஆகமங்கள் சுட்டும் இறைமூர்த்தங்களை வழிபடுவதற்கும், சமய உணர்வினை உள்ளத்தில் வளர்த்தற்கும் இந்துக் கோயில்களில் சிறப்புப்பெறும் இறைமூர்த்தங்கள் அடிப்படையாக விளங்குகின்றன. அம்மூர்த்தங்களின் தெய்விக வரலாற்றினை அறிவதற்கு புராணங்கள் பெரிதும் துணை புரிகின்றன.

எல்லாக் கலைகளுக்கும் ஆத்மாவாகவும் உடலாகவும் இருப்பவன் இறைவனே என்ற அடிப்படை நம்பிக்கை சைவசமயவாதிகளிடையே பண்டுதொட்டு இருந்துவருகிறது. இறைவன் மீது கொண்ட இறைநம்பிக்கையின் காரணமாகவே மக்கள் அவனை பல்வேறு வடிவங்களில் வழிபட்டனர். இவ்விக்கிரக வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு சிற்பக்கலை திருக்கோயில் கலையாகத் திகழ்வதைக் காண முடிகிறது. சிற்ப உருவங்கள், ஓவியங்கள் அமையாத கோயிற்கட்டடங்கள் இல்லையெனக் கூறுமளவிற்கு அவை முக்கியத்துவம் பெறுகின்றன. கோயில், தரை, சுவர், சிகரம்,கோபுரம், மண்டபம், தூண்கள், வாயில் நிலைகள் முதலிய கட்டடங்களில் சிற்ப உருவங்கள் காணப்படுகின்றன. ஈழத்துச் சிதம்பரத்திலே இடம்பெறுகின்ற சிற்பங்கள் மக்கள் மனதில் பக்தியை ஏற்படுத்தத்தக்க வகையில் அமைவது புராணங்களின் மற்றொரு செல்வாக்கு எனலாம். (சுகந்தினி, சி., 2017:20)

***இலிங்கம்***

சிவாலயத்தின் கருவறையில் இடம்பெறுவது இலிங்கமாகும். சிவனுக்கென சிறப்பாகவுள்ளத் திருமேனிகளில் அருவ நிலையைச் சித்திரிப்பதே இதுவாகும். இலிங்கம் பற்றிய வரலாற்றியல் கருத்துக்களும் தத்துவார்த்த கருத்துக்களும்

தொன்மைக்காலம் முதல் நிலவி வந்துள்ளன. சிவன் இலிங்க வடிவில் இந்தியாவெங்கணும் பரந்து வழிபடப்படுபவன். எனினும் இவனது பல்வேறு உருவத்தோற்ற வழிபாடு தென்னிந்தியச் சிவாலயங்களிலேதான் சிறப்பாகக் காணப்படுகிறது. இலிங்கம் பற்றியும், ஏனைய வடிவங்கள் பற்றியும், இதிகாச புராணங்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன. சுவேதாஸ்வர உபநிடதத்தில் யோனி, லிங்கம் என்ற சொற்கள் காணப்படுகின்றன. இங்கு இலிங்கம் என்பது அடையாளம் அல்லது அம்சம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (கோபாலகிருஷ்ண ஐயர், ப., 2010:302) மிகவும் நுண்ணிய உடம்பு என்னும் பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தியானத்திற்குரிய அடையாளமாக விளங்கிய இலிங்கத்தில் தேவையேற்படும் காலத்தில் இறைவன் தோற்றம் பெறுவான் என்ற கருத்தைப் புராணங்கள் தரும் விபரங்களிலிருந்து அறியலாம்.

இலிங்க புராணத்தில் இலிங்க வழிபாட்டின் தொடக்க காலம் பற்றிய குறிப்பு உள்ளது. பிரமன், விஷ்ணு ஆகிய இருவருக்குமிடையே தம்முள் யார் பெரியவன் என்ற கேள்வி எழ, இருவருக்குமிடையே தோன்றிய ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் இலிங்கத்தின் அடிமுடியைத் தேடுவதாக ஒப்புக் கொண்டு,இறுதியில் முடியாமல் தோல்வியை ஏற்றுத் திரும்பினார். இலிங்கத்திலிருந்த சிவனை வழிபட்டவேளை அவர்கள் வேண்டிய வரத்தை அளித்தான். அன்றுமுதல் இலிங்க வழிபாடு இடம்பெற்று வருவதாக இலிங்கபுராணம் (இராமநாதன், எஸ்., 1969:20-22) குறிப்பிடுகிறது. சிவ லிங்க வழிபாட்டின் தோற்றம் பற்றிய கருத்துக்கு இக்கதை முக்கியத்துவமுடையதாகும். இவ்விளக்கத்தில் ஜனனக்குறி வழிபாடு பற்றி எதுவித குறிப்பும் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. சிவபுராணம் இலிங்கத்தை பிரணவத்தோடு தொடர்புபடுத்துகிறது. எல்லாத் தெய்வங்களும் இலிங்கமயமாக விளங்குவதால் இலிங்கத்தையே வழிபடும்படி விஷ்ணு, தேவர்களுக்கு அறிவுறுத்துவதைக் கூறுகிறது. இவ்வாறு புராணங்கள் இலிங்கத்தைச் சிவனுக்குரிய அடையாளமாகவே குறிப்பிடுகின்றன. இராமன் தனக்கேற்பட்ட தோஷங்களிலிருந்து விடுபட இராமேசுவரத்தில் இலிங்கம் ஒன்றினை நிறுவி வழிபட்டான் என்பது இதிகாசம் தரும் செய்தி. இலிங்க தரிசனத்தால் கிடைக்கப்பெறும் பலன்களையும் புராணம் குறிப்பிடும். (தமிழ்வாணன், லே., 2001:11)இலிங்கம் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்படும் சிறப்ப விக்கிரகமென்பதும் சுட்டத்தக்கது.

***இலிங்கோற்பவ மூர்த்தி***

இலிங்கோற்பவ மூர்த்தியின் தெய்விக வரலாறு இலிங்க புராணம், கூர்ம புராணம், பிரம்ம புராணம், சிவ புராணம், ஸ்கந்த புராணம் ஆகியவற்றில் இடம் பெறுகிறது. பிரமா, விஷ்ணு ஆகிய இருவரது அகந்தையை அடக்குமுகமாக சிவன் பேரொளிப் பிழம்பாகக் கண்ணுக்கெட்டாதவாறு நின்ற சம்பவம் இம்மூர்த்தியோடு தொடர்புடையது.

ஒருமுறை பிரமனும் விஷ்ணுவும் தம்முள் யார் பெரியவன் என தம்முள் வாதிட்டு கலகம் விளைவிக்கத் தொடங்கினர். அச்சமயம் அவர்கள் இருவர் மத்தியிலே பேரொளிப்பிழம்பு ஒன்று தோன்றிற்று. அதன் அடியும் முடியும் கண்ணுக்கெட்டாதவாறு எல்லை மீறி அகன்று மறைந்து நின்றது. இதனால்,திருமால் அடியினைக் காணும் முயற்சியில் பன்றி வடிவம் கொண்டு பூமியை அகழ்ந்து கீழே சென்றான். நான்முகன் அன்ன வடிவேற்று உச்சியைத் தேடி உயரப்பறந்தான். அடியும் முடியும் காண முடியாத நிலையில், தம்மைக் காட்டிலும் பெரியவன் உளன் என்பதை ஏற்று அவ்வொளிப் பிழம்பைப் புகழ்ந்து நின்றனர். சிவபிரான் ஒளி வடிவாகிய இலிங்கத்தின் நின்றும் நீங்கி அவர்கள் கண்ணுக்குப் புலனாகி அவர் இருவருக்கும் திருவருள் நல்கினார். 'நீங்கள் இருவரும் என்னிடம் இருந்தே தோற்றம் பெற்றீர்கள், நாம் மூவரும் ஓரம்சமே, இப்பொழுது பிரமா, விஷ்ணு, மகேசுவரனெனப் பிரிந்து நிற்கின்றோம்' எனக் கூறி மகேசுவரன் மறைந்தான் என சிவபுராணம் (கோபாலகிருஷ்ண ஐயர், ப., 2010:302)கூறுகிறது. புராணங்களில் அடிக்கடி கூறப்பட்டுள்ள இத்தெய்விக வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டது இலிங்கோற்பவ மூர்த்தியின் அமைப்பாகும்.

சிவாலயங்களின் ஸ்தூல இலிங்கமாகிய கோபுரங்களிலும் இவ்வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஈழத்துச் சிதம்பரத்திலே இம்மூர்த்தம் கருங்கல்லினால் செதுக்கப்பட்டு, கருவறையின் தெற்கு வெளிப்புறச் சுவரில் தனிக்கோட்டத்தில் வைக்கப்பட்டுள்ளமை காணலாம்.

இவ்வடிவத்தில் சந்திரசேகர வடிவமும் காலசம்ஹார வடிவமும் இணைந்த தன்மையினையும் காணலாம். சிவன் இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு காலனை உதைத்த புராணக்கதை வரலாறுடன் தொடர்புடையதாகவே காலசம்ஹார வடிவம் அமைகிறது. மேலும் இலிங்கோற்பவ மூர்த்தி இலிங்கம் விளங்கும் கருவறையின் மேற்குக் கோஷ்டப் பஞ்சரத்தில் அமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

***சோமாஸ்கந்த மூர்த்தம்***

"இல்லறமல்லது நல்லறமன்று" என்று நமக்குணர்த்துவது போல் அமைந்த சிவமூர்த்தம் தான் சோமாஸ்கந்த மூர்த்தம். சத் - சக்தி, சித் - சிவம், ஆனந்தம் - முருகன். இந்த மூவரின் ஒருங்கிணைந்த வடிவமே சோமாஸ்கந்த வடிவமாகும். தந்தை சிவபெருமானுக்கும், தாய் பார்வதிக்கும் இடையில் அமர்ந்த கோலத்தில் முருகப் பெருமான் தேவர்களுக்கு தரிசனம் தந்த வடிவம்தான் இது என்று புராணங்கள் கூறுகின்றன.

ஈழத்துச் சிதம்பரத்திலே சோமாஸ்கந்த வடிவம் சிறப்புப் பெற்று விளங்குவதைக் காணலாம். உற்சவ மூர்த்தியாக விளங்கும் சோமாஸ்கந்த வடிவம் ஐம்பொன்னால் ஆக்கப்பட்ட விக்கிரகம் தனி ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளமை காணலாம். தனி ஆலயத்தில் மேற்புறத்தில் சுதையினாலான இம்மூர்த்தம் நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளதோடு, ஆலயத்தில் சோமாஸ்கந்த மூர்த்தம் வார்ப்பதற்கு அம்பலவி முருகர் தனது கடுக்கண்களைக் கழற்றிக் கொடுக்கும் காட்சியும் செதுக்கப்பட்டுள்ளமையையும் காணலாம். இது தலவரலாற்றுடனும் தொடர்புடையதாக விளங்கும் நிலையில் ஈழத்துச் சிதம்பர புராணமானது,

**"செப்பியதஞ் செல்வமெலாஞ் சிவன் பணிக்கே சேர்த்தவரும்**
**ஒப்பறுபொற் கடுக்கனிரண் டுதவாமற் கமக்கின்ற**
**துப்புறுதந் நிலையுணர்ந்து தாமவற்றைக் கழற்றிப்பின்"(ஈழ.சித.பு: 479)**

என்று பாடுகிறது. மேலும், சுதையினாலான இவ்வடிவம் ஒன்று சிவனது கோபுரத்தின் கிழக்குத் திசையில், இதே வடிவத்தை சிவனது தேரில் சிற்பமாகச் செதுக்கியுள்ளமையையும் காணக்கூடியதாகவுள்ளது.

***சந்திரசேகர மூர்த்தி***

தென்னாட்டிலும் ஈழத்திலுமுள்ள சிவாலயங்களில் காணப்படும் சிற்ப வடிவங்களில் சந்திரசேகர வடிவம் பிரபலம் வாய்ந்தது. சிவன் சடாமுடியில் பிறை சூடி நிற்கும் நிலையினைச் சிறப்பாக உணர்த்துவதே இவ்வடிவத்தின் தலையான அம்சமாகும். சிவன் பிறைசூடிய வரலாறு பற்றிப் புராணங்கள் அடிக்கடி குறிப்பிடுவதில்லையாயினும் சிவன் பிறை சூடியவனெனச் சுட்டப்படுகிறான். இவ்வடிவத்திற்குரிய தெய்விக வரலாறு சிவபுராணத்தில் இடம் பெறுகின்றது. தக்கனின் இருபத்தேழு புதல்வியரை விவாகம் செய்த சந்திரன், உரோஹிணியிடத்தில் தனியன்பு செலுத்தினான். தக்கன் தம் புதல்வியர் அனைவரிடமும் பாகுபாடின்றி ஒரே தன்மைத்தாய் பழகும்படி பலமுறை பணித்தும் சந்திரன் செவி சாய்க்கவில்லை. இதனால் அவன் மிகவும் சினமுற்று, சந்திரனைத் தேய்ந்து அழிந்துபோகும் படி சபித்தான். இச்சாபத்தின் காரணமாய்த் தேய்ந்து குறைந்து கொண்டே வந்த சந்திரன் தனது பதினைந்து கலைகளையுமிழந்து தனிக்கலையுடன் ஓடோடிச் சென்று இறைவனிடம் சரணடைந்தான். சிவனும் அவனுக்கு அபயமளித்துத் தன் தலையிடத்தில் பகலிடமளித்துத் தம் தலையணியாகக் கொண்டான். மேலும்

தேய்ந்தொழிய தக்கனிட்ட சாபத்தைச் சிறிது வேறுபடுத்தி மீண்டும் மீண்டும் தேய்ந்து வளரும்படி சாப விமோசனம் நல்கினார். இறைவன் இவ்வொற்றைக் கலைப் பிறையைச் சூடிய சம்பவமும் இதுவேயாகும். (கோபாலகிருஷ்ண ஐயர், ப., 2010:368)

இச்சிற்ப வடிவமானது ஆலயத்தின் பிரகாரங்களிலும், கோபுரங்களிலும் அமைக்கப்படுதல் காணலாம். ஈழத்துச் சிதம்பரத்திலே இம்மூர்த்தி சுதைச்சிற்பமாக ஆலயத்தின் கோபுரம், வெளிக்கோபுரத்தின் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

***கல்யாண சுந்தர மூர்த்தி***

இச்சிற்ப வடிவம் சிவனது திருக்கல்யாணக் கோலத்தைச் சித்திரிக்கும். சிவன் உமையோடு சேர்ந்திருக்கும் வடிவங்களின் வரிசையில் கல்யாண சுந்தர மூர்த்தியும் இடம்பெறுவது பொருத்தமானதே. சிவன் உமையைத் திருமணம் புரிந்த தெய்விக வரலாறு புராணங்களில் பரந்த அளவில் இடம்பெறுகின்றது. உமை ஹிமவானுக்குப் புத்திரியாகப் பிறந்தவள். சிவனைக் கணவனாக அடைய விரும்பி கடுந்தவம் புரியலானாள். சிவனிடம் எல்லோராலும் விரும்பப்பட முடியாத பல இயல்புகள் இருப்பதால் அவரை மணப்பதைத் தவிர்க்க வேண்டுமென சிவனே மாறுவேடத்தில் வந்து பார்வதியிடம் வேண்டியவிடத்தும் உமை தனது விரதத்தைக் கைவிடவில்லை. இறுதியில் அவளது உறுதியிலும் பக்தியிலும் திருப்தியுற்ற சிவன், அவள் முன் தோன்றி, அவள் வேண்டிய வரத்தினை அளித்தார். திருமணத்தை முறையாக ஒழுங்கு செய்யும் நோக்கில் சப்தரிஷிகள் ஹிமவானிடம் சென்றனர். திருமணத்திற்குரிய ஆயத்தங்கள் நடந்தேறின. பிரமனே புரோகிதன். விஷ்ணு இவ்வைபவத்தில் முக்கிய பங்கு வகித்தார். (கோபாலகிருஷ்ண ஐயர்,ப., 2010:415-416) இதுவே சிவனது கல்யாண சுந்தர வடிவத்திற்குரிய புராணப்பின்னணியாகவும் அமைகிறது.

இம்மூர்த்தத்தில் சிவன், பார்வதி, விஷ்ணு, இலக்சுமி, பிரம்மதேவர் ஆகியோர் முக்கியமானவர்களாவர். சிவனும் பார்வதியும் கல்யாணக் கோலத்தில் கேந்திர இடத்தில் கிழக்கு நோக்கியவர்களாக விளங்குவர். சிவனுக்கு இடது பக்கத்தில் விஷ்ணு இடம்பெறுவார். சற்று முன்னிலையில் வலப்புறத்தில் பிரமதேவர் வீராசனத்தில் அமர்ந்து அக்கினி வளர்ப்பவராக விளங்குவார். முழு வடிவத்தையும் பிரபாமண்டலம் அலங்கரிக்கும். மூர்த்திகளது ஆபரணங்கள் சிற்ப எழிலை மேலும் மிகுதிப்படுத்துவன. மூர்த்திகளின் அவயவங்கள் முப்பத்திரெண்டு இலட்சணங்களுடன் கூடியதாக அழகுமிளிர அமைதல் வேண்டும் என காரணாகமம் குறிப்பிடுகின்றது. விஷ்ணுவின் சக்தியாகிய ஸ்ரீதேவி சகல அங்கலட்சணம் பொருந்தியவளாக பற்றியவளாகச் சித்திரிக்கப்படுகிறாள்.(கோபாலகிருஷ்ண ஐயர், ப., 2010:416-417)ஆலயங்களில் இச்சிற்ப வடிவம் கோபுரங்களிலும் கருவறை விமானங்களிலும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தில், ஸ்ரீ மீனாட்சியம்மன் சுந்தரேசுவரருக்குத் திருக்கல்யாணம் நடைபெறும் சிற்பம் கோபுரத்தின் கிழக்குத் திசையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், யாகசாலை மண்டப முகப்பிலும், கருவறைக்கு மேலெழுந்த விமானத்திலும், சைவ அறப்பணி நிலையத்தின் வெளி முகப்பிலும் கல்யாண சுந்தரனார் வடிவம் சுதைச்சிற்பமாக வைக்கப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது. இதை ஒத்த சிற்ப வடிவம் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திலும் காணலாம். காரைநகர் சிவாலயத்தின் இறைவன் சுந்தரேசுவரர் ஆவார். ஆகவே, மதுரை மீனாட்சியம்மன் இங்கு சௌந்தராம்பிகையாக விளங்குகிறாள் என்பதை ஐதீகமாகக் கொண்டு, இச்சிற்பம் இங்கு அமைக்கப்பட்டிருக்கலாம்.

***அர்த்த நாரீசுவரர்***

சிவன் தேவியுடன் ஒருசேர இணைந்து விளங்கும் வடிவமும் சிவ வடிவங்களின் வரிசையில் சிறப்பிடம் பெறுகின்றது. சிவன் இவ்வடிவம் கொண்டதை விளக்கப் பல தெய்விக வரலாற்றுக் கதைகள் காணப்படுகின்றன. புராணங்களிலும் அர்த்தநாரீசுவர வடிவத்தின் விளக்கம் இடம்பெறுகிறது. சிவன், பார்வதி சமேதராய் கைலாயத்தில் வீற்றிருந்த சமயம், பிருங்கி ரிஷி பரம்பொருளையன்றி பிறிதொருவரை தொழ மாட்டேன் என விரதம் பூண்டு,பார்வதி தேவியரை வலம்வரத் தவறினார். இதனால் வெகுண்ட பார்வதி, தசை, குருதி நீங்கி வெறும் தோலுடன் கூடிய எலும்புக் கூட்டுடன் விளங்கும்படி பிருங்கி முனிவருக்குச் சாபமிட்டாள். இச்சாபத்தின் விளைவைக் கண்ட இறைவன்,அவர் தம்மைத் தாங்கிக் கொள்ளும் பொருட்டு மூன்றாவது கால் ஒன்றினை வழங்கினார். பிருங்கி முனிவர் இறைவனது அருளைக் கண்டு ஆனந்தம் மேலிட்டவராய்க் கூத்தாடி மகிழ்ந்தனர். பிருங்கி முனிவரின் கர்வத்தையடக்க பார்வதிதேவி,சிவனை நோக்கிக் கடுந்தவம் புரியலானாள். தவத்தினால் திருப்தியுற்ற சிவன் பார்வதி விரும்பியபடி தனது உடலோடு ஒன்றிணைந்து விளங்கும் வரத்தை நல்கினார். அதுவே சிவனது அர்த்தநாரீசுவர வடிவமாக விளங்கியது. (கோபாலகிருஷ்ண ஐயர், ப., 2010:432)இவ்வாறாக அர்த்தநாரீசுவர வடிவத்தின் தெய்வ வரலாறு விளக்கப்படுகிறது.

இவ்வடிவத்திற்குரிய சிற்ப அமைவிடத்தை நோக்கின்,ஈழத்துச் சிதம்பரத்தில் இம்மூர்த்தியானது கருவறை மீதுள்ள விமானத்திலும், அறப்பணி நிலைய முகப்பிலும் சுதையினால் ஆக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வடிவத்தைத் தேரில் மரச்சிற்பமாகவும் காணலாம்.

***விருஷாரூட மூர்த்தி***

விருஷாபரூட மூர்த்தத்தில் சிவன் தமது வாகனமாகிய இடபத்துடன் கூடியவராக விளங்குவர். புராணங்கள் பல இடங்களில் சிவனது இவ்வம்சத்தைக் குறிப்பிடுமிடத்தும், சிவனுக்கு இடபம் வாகனமாக அமைய வேண்டிய வரலாறு இவற்றில் காணப்படவில்லை. எனினும் பக்தர்களுக்கு அருள்புரிய வரும் வேளைகளில் சிவன் இடபவாகனத்தில் உமையுடன் கூடியவராகத் தோற்றமளிப்பது பற்றிய குறிப்புக்கள் புராணங்களில் காணப்படுகின்றன. சம்பந்தரின் முதற் பதிகத்திலேயே சிவனது இக்கோலம் பற்றிய வருணனை இடம்பெறுகிறது.

**"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி"**(1ம் திரு. பா.01)

எனவரும் குறிப்பு இவ்வடிவத்தைச் சுட்டும்.

ஈழத்துச் சிதம்பரத்தில் ரிஷபாரூடர், பக்தர்களுக்கு அருள்புரியும் நோக்குடன், கோபுரத்திலும், அறப்பணி நிலைய முகப்பிலும் வைக்கப்பட்டுள்ளமை காணலாம். மேற்படி அமைப்பினாலான இம்மூர்த்தம் கருங்கற்சிற்பமாக கோபுர வாசலில் செதுக்கப்பட்டுள்ளமையும் காணலாம். மரத்தில் செதுக்கப்பட்ட சிற்பம் தேரில் அமைக்கப்பட்டுள்ளது. சிவனும் பார்வதியும் இடபத்தோடு கூடியிருக்கும் கோலம் விருஷபாந்திக வடிவமாக அமைய, இடபத்தின் மீது அமர்ந்த கோலம் விருஷபாரூட வடிவமாக அமைவது குறிப்பிடத்தக்கது.

***ஹரிஹர மூர்த்தம்***

புராணங்களில் சைவத்திற்கும் வைஷ்ணவத்திற்குமிடையே போட்டியினைச் சுட்டும் கருத்துக்கள் காணப்படுமிடத்தும், அவற்றிடையே நிலவும் நெருங்கிய ஒற்றுமையை வெளிப்படுத்தும் கருத்துக்களும் இடம்பெறுகின்றன. இத்தகைய கருத்துக்களின் மூலம் இவ்விரு நெறிகளுக்கு இடையே நிலவும் அடிப்படை அம்சங்கள் சார்ந்த பொதுவான தெய்விக சிந்தனையை உருவாக்கிக் கொள்வதற்கு வழியேற்படுகின்றது. இருநெறிகளுக்குமுரிய கடவுளரின் பொதுவான கருத்துக்களும் இதனால் ஒன்றிணைய வழி பிறந்தது எனலாம். இத்தகைய ஒன்றிணைப்பின் மூலம் புதியதொரு தெய்விகக் கடவுட் கோட்பாடு உருப்பெறலாயிற்று. அதுவே ஹரிஹரக் கோட்பாடு ஆகும். ஹிரிஹர

மூர்த்தமே இக்கோட்பாட்டுக்குரிய மூலம் எனலாம். ஹரி ஹரர் பற்றிய பௌராணிக சிந்தனை, சிவனை இத்தகைய வடிவில் உருப்பெறச் செய்து வழிபடுவதற்கு அடிகோலியது. வாமன புராணத்தில் விஷ்ணுவும் சிவனும் ஒரே பரம்பொருட் தத்துவத்தையுடையவர் என்ற கருத்து இடம்பெறுகிறது. தானும் சிவனும் ஒருவரே என்றும் இவ்விரு அம்சங்களை உள்ளடக்கிய நிலையிலேயே தோற்றம் பெறுவதாகவும் இருஷி ஒருவருக்கு விஷ்ணு கூறுவதாக புராணங்களில் இடம்பெறுகின்றது (கோபாலகிருஷ்ண ஐயர், ப., 2010:454) என பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

இச்சிவாலயத்தில் அம்மூர்த்தம் நிற்கும் கோலத்தில், சமபாத ஸ்தானகமாககாணப்படுகிறது. ஆலய விமானம் மற்றும் அறப்பணிச் சபை மண்டப முகப்பு போன்ற இடங்களில் இடம்பெறும் சிற்ப வரிசையில் காண முடிகிறது.ஈழத்து இந்துக்கோயில் மரபில் சிவாலயங்களில் விஷ்ணுபரிவாரமாகவும், சிவனது மூர்த்தி பேதங்களுள் இலிங்கோற்பவ மூர்த்தி, ஹரிஹர மூர்த்தி, சரபேஸ்வர மூர்த்தி ஆகிய வடிவங்கள் இடம்பெறுகின்றன. மேலும் சிறப்பாக பருத்தித்துறையில் அமைந்த வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் ஸ்தூபியில் விஷ்ணு புராணத்தில் இடம்பெறுகின்ற மாலுக்கு சக்கரம் வழங்கிய வரலாற்றினைச் சித்திரிக்கும் சக்கரதான சிற்பமும், ஹரிஹர வடிவமும், விஷ்ணுவின் தசாவதாரங்கள் ஓவியமாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். (சுகந்தினி, சி., (2017:18-19)

***கங்காள மூர்த்தியும் பிக்ஷாடன மூர்த்தியும்***

ஆகமங்கள் சிவனது இவ்விரு கோலங்களையும் அடுத்தடுத்துக் கூறுகின்றன. ஒருசில வேற்றுமைகளைத் தவிர இவ்விரு வடிவங்களிலும் நெருங்கிய ஒற்றுமையுண்டு. தாருகாவனத்தில் உள்ள ஆச்சிரமத்தையண்டிய இடத்தில் சிவன் பிச்சையேந்திய கோலத்தை இம்மூர்த்தம் சித்திரிப்பதாகும். சிவனது இக்கோலத்தை அறியாத இருஷிகள் சிவனை மதியாது விட்டனர். இறுதியில் பிச்சையேந்தும் வடிவில் உள்ளவன் சிவனேயென உணர்ந்து அவனை இலிங்க வடிவில் வழிபட்டனர். தாருகாவனத்தில் பிச்சையேந்தும் கோலத்தில் திரிந்தபடியால் சிவனுக்குப் பிக்ஷாடனர் என்ற பெயர் பொருத்தமாக அமைகிறது. புராணங்களில் இக்கதை பல்வேறு வகைகளில் இடம்பெறுகின்றன. சிவன் பைரவ வடிவத்தில் பிரமனின் தலையொன்றினை வெட்டியதாலேற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்குவதற்கு விஷ்ணுவைச் சந்திக்கும் வரை சிரைச்சேதம் செய்த மண்டையோட்டில் பிச்சையேந்தித் திரியும்படி நேர்ந்த வரலாறும் இங்கு கவனித்தற்குரியது. கங்காளம் என்பது எலும்பைக் குறிப்பதாகும். விஷ்ணுவைச் சந்திக்கச்சென்ற இடத்தில் விஷ்ணுவின் வாயிற்காவலனாகிய விஷ்வசேனனுடன் ஏற்பட்ட போரில் அவனைக் கொல்வதற்குரிய சூழ்நிலை உருவாகி அவனது இறந்த உடலையும் காவித்திரியும்படியும் ஏற்படலாயிற்று. மேற்குறித்த இரு பிரம்மஹத்தி தோஷங்களையும் நீக்குதற் பொருட்டு காசிக்குச் செல்லும்படி விஷ்ணு அறிவுரை கூறவே பைரவர் விஷ்வசேனனின் இறந்த உடலோடு காசிக்குச் சென்று பிரம்மஹத்தி தோஷம் நீங்கப்பெற்று, மகேஸ்வரனாக கைலாசம் திரும்பியதாக இம்மூர்த்தியோடு தொடர்புடைய பௌராணிக வரலாறு கூறும். கங்காள மூர்த்தத்தில் தோளில் தாங்கப்படும் கங்காளத் தண்டில் இடம்பெறுவது எலும்புகளேயாகும். கையில் கபாலம் ஏந்துவதற்கும் இவ்வரலாற்றிலிருந்தே விளக்கம் பெறவேண்டியுள்ளது. தாருகாவனத்திலே தருக்கித் திரிந்த முனிவர்களின் ஆணவத்தை அடக்கிய வரலாற்றோடும் இம்மூர்த்தம் தொடர்புபடும். (கோபாலகிருஷ்ண ஐயர், ப., (2010:460-461)

சிவனது கங்காள மூர்த்தமும் பிக்ஷடனர் மூர்த்தமும் தென்னிந்தியாவிலும் ஈழத்திலுமுள்ள பெரும்பாலான சிவாலயங்களில் வழிபாட்டிற்காக நிறுவப்பட்டுள்ளன. பிக்ஷாடனர் வடிவங்கள் சிவாலயங்களில் உற்சவ காலங்களில் முக்கியத்துவம் பெறுகின்றது.ஈழத்துச் சிதம்பரத்தில் கங்காள மூர்த்தி தேரில் மரத்தினால் செதுக்கப்பட்ட சிற்பமாகக் காணப்படுகிறது. மேலும்,பிக்ஷடனர் மூர்த்தம் இவ்வாலயத்தின் சுவரிலே புடைப்புச் சிற்பமாக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்ததாகச் சித்திரிக்கப்பட்டுள்ள சிற்பம் அன்னபூரணியுடன் தொடர்புடையதாக அமைவதால், இச்சிற்பம் பிக்ஷாடனர் கதையைச் சித்திரிப்பதாக எடுத்துக் கொள்ளலாம்.

***தட்க்ஷிணா மூர்த்தி***

தட்க்ஷிணா மூர்த்தி யோகத்திற்கும் ஞானத்திற்கும் உரியவராவார். சிவனுக்குரிய மூர்த்தங்களுள் தட்க்ஷிணா மூர்த்தம் தனித்துவமுடையது. "தக்ஷிண" என்பது தெற்குத் திசையைக் குறிக்கும். தென்திசை வீற்றிருந்து இருஷிகளுக்கு யோகத்தையும் ஞானத்தையும் அறிவுறுத்தும் காரணம் பற்றி இம்மூர்த்தத்திற்கு தட்க்ஷிணா மூர்த்தி என்ற பெயர் சிறப்பாகப் பொருந்திற்று. ஞானத்தின் உருவாய் அமர்ந்து தன்னை வழிபடுவோர்க்கெல்லாம் ஞானத்தை வழங்குபவராதலின் அவருக்குத் தட்க்ஷிணாமூர்த்தி என்ற பெயர் பிறிதோர் வகையில் பொருந்துவதாகின்றது. லிங்கபுராணம் சனகாதியருக்கு அருள் செய்த சதாசிவன் என்று கூறுகின்றது. (இராமநாதன், எஸ்., 1969:162) ஞானமானது தட்க்ஷிணாமூர்த்தி முன்னிலையில் அவரையே நோக்கிக் கொண்டு இருப்பதாகக் கொள்ளப்படுவது மரபாகும். தட்க்ஷிணாமூர்த்தி வடிவத்தை நான்கு அம்சங்களில் காணலாம். அவை யோக தட்க்ஷிணாமூர்த்தி, ஞான தட்க்ஷிணாமூர்த்தி, வியாக்கியான தட்க்ஷிணாமூர்த்தி, வீணாதார தட்க்ஷிணாமூர்த்தி என்பனவாகும். இவற்றுள் வியாக்கியான தட்க்ஷிணாமூர்த்தியே சிவாலயங்களில் அதிகளவில் இடம்பெறுகின்றது. தென்னிந்தியாவிலும்,ஈழத்திலும் உள்ள சிவாலயங்களில் கருவறையின் தென்புறத்தில் இடம்பெறும் கோஷ்டமொன்றில் தட்க்ஷிணாமூர்த்தியை எழுந்தருளச் செய்வது மரபு. சிவாலயங்களைப் போன்று வைணவ ஆலயங்களிலும் இம்மூர்த்தியைக் காணலாம்.

கருவறையின் மேலுள்ள விமானம்,கோபுரம், ஆலயத்தின் தென்பகுதி போன்றவற்றில் இச்சிற்ப வடிவத்தைக் காணலாம். ஈழத்துச் சிதம்பரத்து விமானத்தில் வியாக்கியான தட்க்ஷிணாமூர்த்தியும், ஞான தக்ஷிணாமூர்த்தி வடிவமும், கோபுரங்களில் அதாவது சிவனது கோபுரத்திலும் வெளிக் கோபுரத்திலும் தக்ஷிணாமூர்த்தியின் நான்கு நிலைகளும், ஐயனார் கோபுரத்தில் வியாக்கியான தக்ஷிணாமூர்த்தி, ஞான தக்ஷிணாமூர்த்தி ஆகிய இரு நிலைகளும் சுதைச்சிற்பமாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. தேரிலும் இம்மூர்த்தம் செதுக்கப்பட்டிருக்கிறது.

***நிருத்த மூர்த்தி***

சிவாகமங்களும் சிற்ப நூல்களும் சித்திரிக்கும் சிவ வடிவங்களுள் சிற்ப எழிலும் தத்துவச் செறிவும் கொண்டு விளங்குவது சிவனது நிருத்த வடிவமாகும். சிவனை இலிங்கமாக வழிபடும் மரபு இந்தியாவெங்கணும் பரந்து காணப்படின் அவன் தன்னைக் கூத்தபிரானாக உருவகித்து வழிபடும் வழக்காறு தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. சிதம்பரம் கோபுரங்களில் ஒன்றில் இருமருங்கிலும் நூற்றெட்டு வகை நடனங்களும் சித்திரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகமங்கள் முக்கியமாக ஒன்பது வகை நாட்டியங்களையே விளக்குகின்றன. இவ்வாறு சிவனது பல்வேறு நாட்டிய நிலைகளில் அமையும் வடிவங்களை நிருத்த மூர்த்திகளாக வைத்து வழிபடும் மரபு இந்தியாவில் பரவியுள்ளது. இவ்வொன்பது வகையினுள் முதல் வகையைச் சார்ந்தது நடராஜர் இயற்றும் நடனம் ஆகும். ஈழத்திலும் தென்னிந்தியாவிலும் நடராஜர் வடிவம் அமையாது சிவாலயம் நிறைவு பெற்றதொன்றாக அமையாது.

நடராச வடிவத்தில் இடம்பெறும் பல்வேறு அம்சங்கள் புராணம் தரும் விளக்கத்திற்கேற்ப அமைவன. உதாரணமாக சடை, முக்கண், நான்கு கரங்கள், புலித்தோல் சடையில் சூடிய கங்கை, நாகாபரணம் ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவற்றைவிட சிவன் நிருத்த மூர்த்தியாக விளங்குவது இவ்வம்சங்களினின்றும் வேறுபடும் ஒன்றாகும். புராணங்கள் ஆங்காங்கு சிவனது நடனம் பற்றிக் குறிப்பிடுகின்றன. சிவனது நடராச வடிவத்தினது தெய்விக வரலாறு சிதம்பரத்தோடு தொடர்புடையது. கோயிற் புராணத்தின் வாயிலாக பதஞ்சலி முனிவருக்கும் வியாக்கிர பாதருக்கும் தரிசனம் அளித்தற் பொருட்டே சிவபெருமான் தில்லையில் நர்த்தனம் புரிந்தார் என்பது தெரிய வருகின்றது.

திருமூலர் திருமந்திரத்தில் ஒன்பதாம் தந்திரத்தில் ''திருக்கூத்துத் தரிசனம்'' என்ற தலைப்பில் சிவனது நாளாந்தக் கூத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். திருமூலர் குருபாரம்பரியம் பற்றிக் குறிப்பிடுமிடத்து,

**''மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்''**(திரும.7005)

என்ற தொடர் மூலம் இவ்விருவரையும் குறிப்பிடுவது கவனித்தற்குரியது.

சிவனது நடனத்தைப் பற்றிய தத்துவ உட்பொருளைக் கூறுமிடத்து பஞ்சாட்சரத்தோடு தொடர்புபடுத்தி, அந்நடனம் தில்லையில் ஆடிய நடனமெனக் குறிப்பிடுவதும் இங்கு கவனத்திற்குரியது. சிவனது நடனம் பற்றிய கருத்துக்குரிய மூலம் எதுவாக இருப்பினும் இந்நிருத்தம் சிவனது ஐந்தொழில்களைத் தெளிவாக உருவகப்படுத்துவதோடு வேறு எச்சமயத்திலும் கலைமரபிலும் காணமுடியாததொரு சிறப்பம்சமாகவும் விளக்குவதாக ஆனந்த குமாரசுவாமி குறிப்பிடுகிறார் என ப.கோபாலகிருஷ்ண ஐயர் தனது ஆய்வில் வெளிப்படுத்தியுள்ளார்.

இத்தகைய நடனச் சிற்பங்கள் ஆலயத்தின் கோபுரம், விமானம், மண்டபச் சுவர்கள் போன்ற இடங்களில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிதம்பரம் கோபுரங்களிலும்,ஈழத்துச் சிதம்பரத்தின் சுவரிலும் நூற்றெட்டு வகை நடனச்சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளமையை காணலாம்.அடுத்து சந்தியா தாண்டவம் குறித்த சிற்பமும் குறிப்பிடத்தக்கது. பார்வதி, முருகன், பிள்ளையார் ஆகியோருடன் தேவர்களும் வணங்கும் நிலையில் தத்ரூபமாகப் புடைப்புச் சிற்பமாக ஆலயத்தின் வடக்குச் சுவரிலே அமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். சப்த தாண்டவங்களுள் ஒன்றாக விளங்கும் சந்தியா தாண்டவம், அந்திப் பொழுதில் ஆடப்பட்டதாகும். இந்நிருத்தம் பிரமதோஷ விரதத்தோடு தொடர்புடையதாகும். நந்தி என்பது ஆன்மாவின் அடையாளம். ஆகவேதான், ஆக்ஞைத் திறப்பதற்காக கொம்புகளின் மத்தியில் நர்த்தனம் புரிகிறார். இந்நிருத்தத்தினை பிரதோஷ வரலாற்றுடன் தொடர்புடையதான மரபுகளிலிருந்து அறியலாம். சிவபுராணம், லிங்கபுராணத்தில் இது அழுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவபுராணம் குறிப்பிடும் காளிகா தாண்டவமும் சிற்பமாக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் சிவன் கோபுரத்தின் வடக்குப்பக்கத்தில் சிவன் நர்த்தனம் ஆடுகிறார். அவரோடு காளியும் நர்த்தனம் புரிகிறாள். இதனைப் பார்த்துக் களிப்பதற்கு பிரம்மன், விஷ்ணு, இந்திராதி தேவர்களும் அங்கே குழுமி கைகொட்டி ஆர்ப்பரிக்கும் வகையில் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

***காலாந்தக மூர்த்தி***

புராணங்களில் சிவனுக்குரிய பெயர்களான ''காலதஹனர்'', அந்தகாந்தகிருத்'' ஆகியவற்றிலிருந்து சிவன் யமனைச் சம்ஹாரம் செய்தவர் என்ற கருத்துப் புலப்படுகிறது. (கோபாலகிருஷ்ண ஐயர், ப., 2010:511) அட்டவீரட்டங்களுள் ஒன்றாகிய காலனைக் காலால் உதைத்த திருவிளையாடலுடன் தொடர்புடையதாகவே புராணங்கள் கூறுகின்றன. காலனை உதைத்த வடிவமாகிய ''மிருத்யுஞ்ஜய வடிவம்'' பற்றிய தெய்வீக வரலாறு இலிங்க புராணத்தில் இடம்பெறுகிறது. பக்தனான மார்க்கண்டேயருக்காக யமனை சங்காரம் செய்த வடிவமாக இவ்வடிவம் சுட்டப்படுகிறது. இதனை காலாந்தக மூர்த்தி என ஆகமங்கள் சுட்டுகின்றன. (சுகந்தினி, சி., 2017:17)

ஈழத்துச் சிதம்பரத்திலே இதன் வடிவத்தினை நோக்கும்போது, மார்க்கண்டேயர் இலிங்கத்தைத் தழுவியவாறும், சிவன் இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு எருமை வாகனத்தில் உள்ள யமனைக் காலால் உதைவது போன்ற இம்மூர்த்த வடிவம் சுதையினால் செதுக்கப்பட்டு விமானத்தின் தென்மேற்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். வழிபடுவோன் இறப்பிலிருந்து தம்மைக் காப்பாற்றும் வண்ணம் உருத்திரனை வேண்டுதல் செய்தால் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவர் என்ற சிந்தனையும் பெறப்படுகிறது.

***சண்டேசானுக்கிரக மூர்த்தி***

சண்டேசருக்கு அருள் புரிந்த மூர்த்தியாக அமைவது சிவனது சண்டேசுவரனுக்கிரக மூர்த்தி ஆகும். யஞ்ஞதத்தனின் மைந்தனாகிய விசாரசர்மனது சிவபக்தியின் காரணமாய் அவனுக்கு இப்பதவி கிட்டியதாக புராணமரபு குறிப்பிடுகிறது. பெரியபுராணத்திலும், சிவபுராணத்திலும் இவ்வரலாறு பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. சிவாலயங்களில் கர்ப்பக்கிருகத்திற்கும் அர்த்த மண்டபத்திற்கும் இடையில் சண்டேசரின் ஆலயம் இடம்பெறும். (கோபாலகிருஷ்ண ஐயர், ப., 2010:491-492) சுவர், விமானம், கோபுரம் என்பவற்றில் இப்புராணப்பின்னணி சிற்பங்களாக்கி வைக்கப்பட்டுள்ளமை காணலாம். ஈழத்துச் சிதம்பரத்தில் கர்ப்பக்கிருகத்தின் மேற்குப்புறத்தில் தனி ஆலயத்தில் இம்மூர்த்தம் கருங்கற்சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

***ஐயனார்***

தேவர்கள் மரணமில்லாத தன்மையை பெறுவதற்காக அமுதத்தைப் பெற பாற்கடலைக் கடைகின்றனர். அப்போது அசுரர்கள் அதைப் பறித்துக் கொள்கின்றனர். அசுரர்களை மயக்கி அமுத கலசத்தை அவர்களிடமிருந்து பெறும்படியாக திருமால் எடுத்த அழகிய பெண் அவதாரமே மோஹினி அவதாரம். பாசுவத புராணத்தில் மோஹினி அவதாரம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஐயனாரின் தோற்ற வரலாற்றினைப் புராணங்களில் பலவாறாகக் காணலாம். அவற்றுள், பஸ்மாசூரன் சிவனாரிடம் ஒரு வரம் பெற்றான். தான் யாரின் தலையில் கை வைக்கின்றேனோ அவர்கள் எரிந்து சாம்பலாகி விடுவர் என்பதே அவ்வரம். இவ்வரத்தின் மகிமையை வரம் கொடுத்தவரிடமே சோதிக்க விரும்பிய பஸ்மாசூரன், சிவனை நோக்கி வரவும், சிவனார் அஞ்சிப் பின்வாங்கினார். அப்போது திருமால் அவ்விடம் வந்து, சிவனாரை அனுப்பி விட்டு, பஸ்மாசூரனின் ஆணவத்தை அடக்குவதற்காக மோஹினி வடிவமெடுத்தார். அவ்வடிவத்தில் மயங்கிய பஸ்மாசூரன், மோஹினியைத் திருமணம் செய்ய விரும்புகிறான். திருமாலாகிய மோஹினி,“ நீ போய் குளித்துவிட்டு, சந்தியாதானம் பண்ணிவிட்டு வா” என்று கூறவும், பஸ்மாசூரன் தன் தலைமேலே கையை வைத்துச் சந்தியாதானம் செய்யும்போது, எரிந்து சாம்பராகின்றான். இதையறிந்த சிவனார் எப்படி சாத்தியம். அந்த அவதார வடிவத்தை எனக்கொருமுறை காட்டு என்று கேட்கவும், திருமால் மீண்டும் மோஹினி உருவம் எடுக்கிறார். சிவனும் அவ்வழகில் மயங்கி ஊடல் செய்யும்போதே ஐயனார் தோன்றினார் என்ற பௌராணிக மரபும் உள்ளது. (உமாசுதக்குருக்கள் - கலந்துரையாடல்) இம்மரபினைச் சித்திரிக்கும் சிற்பவடிவமே ஐயனார் கோபுரத்தின் கிழக்குத் திசையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை ஈழத்துச் சிதம்பர புராணம்,

**“துய்ய மாலொரு தோகைய ளாய்வரச்**
**செய்ய செஞ்சடை சேரழ கன்முனம்**
**மெய்யிற் கூடிய வாடலின் மேவிய**
**ஐயன் சேவடி யஞ்சலி செய்குவாம்”(08)**

என்று கூறுகிறது.

சின்ன காட்சிகளில் மாத்திரமே ஐயனார் புராணங்களில் சுட்டப்படுவதைப் போலவே, பூரணை, புட்கலை ஆகிய இருதேவியரும் ஐயனாரின் சக்திகளாகப் புராணங்கள் ஆங்காங்கு சொல்லியுள்ளன. ஈழத்துச் சிதம்பர புராணம் ஐயனாரை இந்திராணியைக் காத்தவன் என்று போற்றுவதைக் காணலாம்.

**“நறைமலர்க் கூந்தலாளை நன்கனங்காத்தாய் போற்றி”(225)**

இவ்வாலயத்தில் ஐயனார் கோபுரத்தின் வாசலில் கருங்கற்சிற்பமாக இவற்றைக் காணலாம். மேலும் ஐயனார் கோபுரத்தின் தென்கிழக்குத் திசையிலும், வெளிக் கோபுரத்தின் முன், பின் பக்கங்களிலும் சுதைச்சிற்பமாக இவ்வடிவம் அமைக்கப்பட்டுள்மையைக் காணலாம். தேரில் ஐயனாரின் திருவுருவும், பூரணை, புட்கலை சமேத ஐயனார் சிற்பம் மரத்தில் செதுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

***சிவராத்திரி***

ஈழத்துச் சிதம்பரத்தில் சிவராத்திரி விரதத்துடன் தொடர்புடைய இரண்டு புராணச் செய்திகள் சிற்பக்காட்சிகளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். அதில் மகாமண்டபத்தின் முகப்பில் பார்வதி சிவலிங்கத்திற்கு பூசை செய்வது போன்று சுதையினால் சிற்பமாக்கப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது. இதன் பௌராணிக மரபை பார்க்கும்போது, பிரளய காலத்தில் உயிர்கள் சிவனிடத்தில் ஒடுங்கும் போது, அதனைச் சீர்செய்ய பார்வதி தவம் செய்தார். அவ்வாறு, தான் ஈசனை மனதில் தியானித்துப் போற்றிய காலம் “சிவராத்திரி” என்று பெயர்பெறவேண்டும் என்றும், அதனைச் சிவராத்திரி விரதம் என்று அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அதைக் கடைப்பிடிப்பவர்கள் எல்லா நலன்களும் பெற்று முத்தியடைய வேண்டுமென்று சிவபெருமானைக் கேட்டுக்கொள்ள அவரும் அவ்வாறே அருள் புரிந்தார் என்பது ஒரு புராணச்செய்தி. இதையே மேற்படி கூறிய சிற்பமைதி உணர்த்துகிறது எனலாம்.

அடுத்து, ஒருமுறை வேடன் ஒருவன் வேட்டையாட காட்டுக்குச் சென்று, புலிக்குப் பயந்து ஒரு மரத்தில் ஏறி அமர்ந்தான். இரவுவேளையில் தூக்கம் வராமல் இருக்க மரத்தில் இலைகளை பிடிங்கி கீழே சொரிந்தான். அவை மரத்துக்குக் கீழே உள்ள சிவலிங்கத்திற்கு மேலே சொரியப்பட்டன.அன்றைய தினம் மகாசிவராத்திரி என்பதால் இரவு முழுவதும் சிவபெருமானைக் கண் விழித்து பூஜித்த பலனையும் தன்னை அறியாமலேயே பெற்றான். அதன்காரணமாக, அந்த வேடனுக்கு முத்தி அளித்து மோட்சத்தை அருளினார் சிவபெருமான் என்கிறது புராணக்கதை. மகாசிவராத்திரி அன்று விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டுநீங்கிப் போகும் என்பது நம்பிக்கை.

இப்புராணப்பின்னணியை உணர்த்தும் விதத்தில் சிவனுக்குரிய கோபுரத்தின் தென்கிழக்குப் பக்கத்தில் ஒரு மரத்தில் வேடனொருவன் அமர்ந்திருப்பது போன்றும் மரத்தின் கீழே புலி படுத்திருக்கும் நிலையில் தலையை மரத்தை நோக்கி உயர்த்திய நிலையிலும் சுதையினால் சிற்பமாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது.

***பிரதோஷ விரதம்***

பிரதோஷவிரதம் தோன்றுவதற்குரிய வரலாறானது திருப்பாற்கடலைக் கடைந்த கதையோடு தொடர்புடையதாகவும், இவ்வரலாறானது விஷ்ணு புராணத்தில் காணப்படுகிறது. ஈழத்துச் சிதம்பர புராணத்திலும் இப்புராணக்கருத்து சொல்லப்பட்டுள்ளமை காணலாம்.

> **“வானவருந் தானவரு மலைமத்தா வராக்கயிறா மதித்த காலை**
> **ஊனமடை வாசுகியும் பாற்கடலு முகுத்தவிட முடற்றா வண்ணம்**
> **ஆனமர்ந்தோ னருள்முகிழ்த்தே யழகர்தர வமரர்பொருட் டாரவுண்டு**
> **தேனமரு மலர்தூக்கி யுமைகாணத் திருநடனஞ் செய்த நாளே”**(717)

இப்புராணக்கதையைச் சித்திரிக்கும் காட்சி சுவரிலே புடைப்புச் சிற்பமாக்கப்பட்டுள்ளமை காணலாம்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

***ஞானம் கிடைத்தலுடன் தொடர்புடைய புராணச் சித்திரிப்பு***

துருவாச முனிவர் இந்திரனுக்குக் கொடுத்த மாம்பழம், நாரதருக்குக் கிடைக்கப்பெற்று, நாரதர் சிவனாருக்குக் கொடுக்க, அது பிள்ளையாருக்குக் கிடைக்கப்பெற்றது. இதனை திருவிளையாடற்புராணத்தில் காணலாம். (உமாசுதக்குருக்கள் - கலந்துரையாடல்) இப்புராணச் சித்திரிப்பு ஆலயத்தின் சுவரிலும் மணிவாசகர் மடாலயத்திலும் புடைப்புச் சிற்பமாகவும், கோபுரத்தில் சுதைச்சிற்பமாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

மேலும், ஆலயத்தின் கோபுரத்தில் சிவன் பார்வதிதேவியுடன் விளங்குகிறார். சிவன் பிள்ளையாருக்கு ஞானமாகிய மாம்பழத்தையும், பார்வதி ஞானசக்தியாகிய வேலை முருகனுக்கும் வழங்கும் காட்சி சிற்பமாக்கப்பட்டுள்ளது. பார்வதி முருகனுக்கு வேல் வழங்கும் காட்சி கோபுரத்தில் சிற்பமாக்கப்பட்டுள்ளது. அதே சிற்ப வரிசையில் சிவன் பிள்ளையாருக்கு மாம்பழம் கொடுக்கும் பௌராணிகக் கதையும் சிற்பமாக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவ்விரு சிற்பங்களும் ஞானத்தை வழங்குவதற்கான குறியீட்டமைப்பில் செதுக்கப்பட்டிருக்கலாம் என்றும் எண்ணத்தோன்றுகிறது. காரைநகர்ப் பண்பாடு குடும்பம் என்ற கட்டுக்கோப்புக்குள் பெற்றோரை முதன்மைப்படுத்தி வாழுகின்ற சமுதாயம். அதனால் நன்னிலையில் அவர்களது வாழ்வும் அமைந்து செழிப்புறுகிறது. இப்பண்பாட்டுப் புலத்தை மேல்வரும் புராணப் பின்னணியில் அமைந்திருக்கும் சிற்பங்கள் வெளிப்படுத்துவதாகவுள்ளது. சிவன், பார்வதி, பிள்ளையார், முருகன் அனைவரும் ஒரே குடும்பம். பிள்ளையார், முருகன் ஆகியோருக்கு முறையே மாம்பழம், வேல் என்பவற்றை ஞானத்தின் அடையாளமாக குறியீட்டு நிலையில் உணர்த்தப்பட்டுள்ளமையானது, பெற்றோரை மதித்து வாழ்ந்தால் ஞானம் கிடைக்கப்பெறும் என்ற வாழ்வியல் நெறி உலகத்தாருக்கு எடுத்துக்காட்டுவதாகவும் கொள்ளலாம்.

***அன்னபூரணியுடன் தொடர்புடைய புராணச் சித்திரிப்பு***

உலகத்துக்கே படியளக்கின்ற முதல்வர் சிவபெருமான். அந்தப் பரம்பொருளுக்கே படியளப்பவராக அன்னபூரணி திகழ்கிறார். எண்சாண் உடலுக்கு சிரசே பிரதானம் என்பார்கள். அந்த உடலில் உயிர் தரித்திருக்க உணவு அவசியம். உணவில்லாமல் யாரும் வாழ முடியாது. உணவு என்னும் இரையைத் தேடுதலின் பொருட்டே உயிர்கள் இடம்பெயரத் தொடங்குகின்றன. உயிர்களின் அடிப்படையாக இருக்கும் உணவுக்கு ஆதார சக்தியாக விளங்குபவள் அன்னபூரணிதேவி.மணிவாசக மடாலயத்தின் சுவரிலும், ஆலய உட்சுவரிலும் சுதையினாலான புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அறப்பணி நிலையத்தின் முகப்பில் சுதையினால் அமைந்த சிற்பம் வைக்கப்பட்டுள்ளது. அன்னபூரணியின் வரலாறு பற்றி வராக புராணம், திருவிளையாடற்புராணம், காசி புராணம் என்பன விளக்கி நிற்கின்றன.

பார்வதி, பூவுலகில் காசி நகரத்தில் அன்னபூரணியாக அவதரித்தாள். பிரம்மதேவரின் தலையைக் கொய்ததால் ஏற்பட்ட பிரமஹத்தி தோஷம் நீங்காமல் அலைந்த சிவனார், அன்னபூரணியிடம் பிட்சை ஏற்று தோஷம் நீங்கப்பெற்றார் என்பது வரலாறு. ஆணவத்தைவிட ஆபத்தானது பசி பசிப்பிணியால் எந்த உயிரும் துன்புறக் கூடாது என்பதை உணர்த்தவுமே அன்னபூரணி அருளாட்சி புரிகிறாள் என்பது புராணச் செய்தியாகும்.

காரைநகர்ப் பண்பாட்டில் விருந்தோம்பல் முதன்மையானது. ஈழத்துச் சிதம்பரத்தில் தினந்தோறும் அன்னதானம் வழங்கப்படுகிறது. இதனைஈழத்துச் சிதம்பர புராணம்,**“மங்கலமா யமுதளித்தும்”(192)** என்ற அடியால் உணர்த்துகிறது. காரைநகர் மகளிர் விருந்தோம்பலில் சிறந்தவர்கள் என்பதனை ஈழத்துச்சிதம்பர புராணம்,

**“மேழிதருங் கந்தமலி வெண்சோறுங் கறிவகையும் விருந்தி னர்க்கு**

நாளுநனி யூட்டிவழி விடுத்துப்பின் வருவிருந்தை நயப்பி னோக்கு”(78)

என்று பாடுகிறது. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று சங்க இலக்கியம் சொல்வதைப் போல, உணவளித்தவர்கள் அந்த உயிரைக் காத்தவர் என்றே போற்றப்படுவார். எனவே, சக உயிர்களை நேசித்து, உணவளிப்பவர்கள் வெகு நிச்சயமாக அன்னபூரணியின் அருளைப் பெறுவார்கள் என்ற புராணச் செய்திக்கிணங்க, காரைநகர்ப் பண்பாடும் அமைந்து விளங்குகின்ற திறத்தினாலேயே ஈழத்துச் சிதம்பரச் சுவர்ச் சிற்பத்தில் இப்புராணச் செய்தி காட்சிப்படுத்தப்பட்டுள்ளதெனலாம். மேலும் கொடுப்பதனால் உயர்வு கிடைக்கின்றது என்பதனாலும் கொடுக்கின்ற சிந்தனை ஓங்க வேண்டும். கொடுப்பதில் சிறந்தது அன்னம். இச்சிந்தனையை விதைப்பதற்காகவே இப்படியான புராணச் சித்திரிப்புக்கள் வனப்புடன் செதுக்கப்படுகின்றன.

***ஆலய வரலாற்றுடன் தொடர்புடைய காட்சிகள்***

சோ.இளம்பூரனார் எழுதிய ஈழத்துச் சிதம்பர புராணம், இத்தல வரலாற்றினையும், சிறப்புக்களையும், மகிமைகளையும் எடுத்து விளக்குகிறது. செய்யுள் உரை வடிவிலும், கர்ணபரம்பரைக் கதைகளாகவும் அறியப்பட்டுவந்த, இத்தல வரலாறுகளை, திருத்தேர்களிலே பக்தர்களின் காட்சிப்புலத்திற்கும், வரலாறு சார்ந்த மனக்கற்கைக்கும் ஏதுவானதாக அமைந்துள்ளதெனலாம்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆலயத்தை அழிக்கவந்த வரலாறு, (ஈழ.சித.பு:354,355)அந்நியருக்குப் பயந்த அந்தணர் (கனகசபாபதிக்குருக்கள்), ஐயனாரை நிலவறையில் வைத்துப் பூசை செய்த வரலாறு, (ஈழ.சித.பு:357) ஆண்டிமுனிவர் படுத்திருப்பது போன்றும் அவரது கனவில் ஐயனார் தோன்றுவது போன்றும், அரசமரத்துக்குக் கீழ் சிலை வெளிப்படுவது போன்ற காட்சி, ஐயனார் சிலை எடுத்தலும் ஸ்தாபித்தலும்,கோயில் அமைத்தல்,சோமாஸ்கந்த மூர்த்தம் தொடர்பான வரலாறு, (ஈழ.சித.பு:511) நான்கு முனிவர்களுடன் தொடர்புடைய வரலாறு அதாவதுதுர்வாச முனிவர் முனிவர், (ஈழ.சித.பு:259) அகத்திய முனிவர், (ஈழ.சித.பு:195) தினகரன் முனிவர், (ஈழ.சித.பு:206) ஆண்டி முனிவர் (ஈழ.சித.பு:221) ஆகிய நால்வரும் இத்தலத்தில் தவம் புரிந்த வரலாறுகள் என்பன தேர்களிலும், ஐயனார் கோபுரத்தின் தென்மேற்குப் பக்கத்திலும் சிற்பமாக்கப்பட்டுள்ளன. ஆலய வரலாற்றுடன் தொடர்புடைய அம்சங்கள் சிற்பமாக்கப்பட்டுள்ளதோடு, ஆலயத்தின் உட்புறச் சுவரிலே அவை ஓவியங்களாகவும் தீட்டப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

***மாணிக்கவாசகரது வரலாறுடன் தொடர்புடைய சிற்பங்கள்***

மணிவாசகரது வரலாற்றுச் சிறப்பினை புகழ்ந்து பாடிய திருவாதவூரடிகள் புராணம், இவற்றில் சொல்லப்பட்டுள்ள செய்திகளுள் அற்புதங்கள் ஈழத்துச் சிதம்பரத்திலே மணிவாசக மடாயலச் சுவர்களிலே புடைப்புச் சிற்பங்களாக்கப்பட்டுள்ளமை காணலாம்.

சிவபெருமானே நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டு வரும்படி நடந்து கொண்டமை,(குதிரையிட்ட சருக்கம் பா:02) மண் சுமந்து அடிபடும்படி நடந்து கொண்ட வரலாறு, (மண்சுமந்த சருக்கம் பா:50) ஊமைப் பெண்ணைப் பேச வைத்தமை, (புத்தரை வாதில்வென்ற சருக்கம் பா:86) போன்றன திருவாதவூரடிகள் புராணத்தில் கூறப்பட்டுள்ளன. இவற்றை மடாலயத்தின் மேல்பக்கச் சுவரிலே புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளமை சிறப்பாக உள்ளது.

***நிறைவாக***

புராணங்கள் சிற்பங்களுக்கு உயிராக அமைவதோடு, அவற்றினூடாக வாழ்வியல் அம்சங்களைப் பிரதிபலிப்பனவாயும், அவை குறிப்பாக திருக்கோயில்களிலேதான் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன என்பதையும் காரைநகர் சிவன் கோயில் சிற்பங்கள் பிரதிபலிக்கும் புராணச் சித்திரிப்புக்களிலிருந்து பெறப்பட்ட முடிவாக அமைகிறது.

***உசாத்துணை நூல்கள்***


[1] அதிவீரராமபாண்டியர்,கூர்மபுராணம், சென்னை, இலக்ஷ்மீவிளாச அச்சுக்கூடம்.

[2] இளமுருகனார், சோ.,ஈழத்துச் சிதம்பர புராணம்,காரைநகர்,ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம், (2017).

[3] கடவுண் மாமுனிவர்., திருவாதவூரடிகள் புராணம்,காரைநகர்,பாலா அச்சகம்,(1982).

[4] கணபதி ஸ்தபதி,வை., சிற்பச் செந்நூல்,சென்னை,தொழில்நுட்பக் கல்வி இயக்கம்,(1978).

[5] முரளி, சோ.,"இதிஹாச புராணங்கள்", இந்து நாகரிகம்,இலங்கை,இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், (2011).

[6] கோபாலகிருஷ்ண ஐயர், ப.,இந்துப் பண்பாட்டு மரபுகள்,யாழ்ப்பாணம்,வித்தியா வெளியீடு,(1992).

[7] ………………..,இந்து விக்கிரகக் கலை மரபில் சிவ வடிவங்கள், இலங்கை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், (2010).

[8] சங்கரப்பிள்ளை, வி., சிவத்திருவடிவங்கள்,வெள்ளவத்தை, கொழும்பு சிவத்திருமன்றம்.

[9] பாலேந்திரன், ச., காரைநகர் தொன்மையும் வன்மையும், கொழும்பு, பாலாவோடை அம்மன் பதிப்பகம்,(2002).

[10] பத்மநாதன், சி.,இந்துக்கலைக்களஞ்சியம்,இலங்கை,இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், (2009).

[11] கந்தசாமி, சோ, ந.,"புராணங்களின் படிப்பினைகள்", இந்துஒளி பொன்விழாச் சிறப்பு மலர், இலங்கை, அகில இலங்கை இந்துமா மன்றம், (2007).

[12] சுகந்தினி, சி., யாழ்ப்பாணத்து இந்துக் கோயிற் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கு,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கா.கைலாசநாதக் குருக்கள் நினைவுப் பேருரை,(2017).

[13] உமாசுதக்குருக்கள், தி., வயது – 44,ஈழத்துச் சிதம்பரத்தின் மகோற்சவ பிரதமகுரு, 27 – 02 – 2020, பி.ப. 03 – 04மணிவரை., 03 – 03 – 2020,மு.ப. 11 – 12மணிவரை.